# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 17.11 2021ம் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணியில் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் (TURIP) 2021-22 இன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் 39 பணிகள் 8.458 கி.மீ நீளத்திற்கு சீரமைப்பு செய்திட நிதி ஒதுக்கீட்டுடன் நிர்வாக அனுமதி வழங்கிட இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2819/2021/இ1 நாள்.28.10.2021 இல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் கோரப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடிதம் ந.களண்.19089/2021/இ2 நாள்.12.11.2021 இல் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் (TURIP) 2021-22 இன் கீழ் 39 பணிகள் 8.458 கி.மீ நீளத்திற்கு செயல்படுத்திட மாநில உயர்மட்ட திட்ட அனுமதி வழங்கும் குழுவினால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, 39 பணிகளை கீழ்கண்டுள்ளவாறு 5 சிப்பங்களாக செயல்படுத்திட தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி வழங்க கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S. No | Package No | Name of Work | Length in Km | Width in meter | Estimate Amount In Lakhs |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | Improvements to BT surface at Vaikkal Road(Five Corner to Srividhyalaya School compound),New hospital road in Ward No - 01, Vaikkal Road(Maternity Centre to GRS Sweets) in Ward No - 7, Vaikkal Road(GRS Sweets to Five Corner),Kamaraj Street -1,Kamaraj Street -2,Varathan Street -1,Varathan Street -2 in Ward No - 8,North park Street -1, North park Street -2 in Ward No - 9 in Gobichettipalayam Municipality | 1.63 | 4.50,5.00, 5.50,6.00, 7.00 | 100.00 |
| 2 | 2 | Improvements to BT surface at North park Street -3, New hospital road Ward No - 9, South park Street -1,South park Street -2 in Ward No - 10,Pathivilas street(Upto Kamatchiamman Koil Street),Srinivasa Nagar, Srinivasa Cross Street ,Bharathidhasan street in Ward No - 11 in Gobichettipalayam Municipality | 1.491 | 4.50,5.00 ,7.00,7.50, 8.00 | 100.00 |
| 3 | 3 | Improvements to BT surface at Kalamegam Street in Ward No - 13, New hospital road in Ward No - 14, old hospital road ,Vaikkal Road, yahoob road in Ward No - 15, kabilar road in Ward No – 16, Subbu Nagar 2 in Ward No -29 in Gobichettipalayam Municipality | 1.758 | 4.30,5.00, 6.00,6.50 | 100.00 |
| 4 | 4 | Improvements to BT surface at Vasthu Nagar Main Road, Kadai Veethi (Bazzar Street ),perumalsamy nagar main street in Ward No - 16, Subbanan main Street in Ward No - 17, Nanjappa Street -1,Nanjappa Street -2 ,Slaugther House street in Ward No - 25 in Gobichettipalayam Municipality | 1.668 | 4.50,4.70, 4.80,5.00, 5.60,7.50 | 100.00 |
| 5 | 5 | Improvements to BT surface at VNV Garden, Periyannan Street Ward No - 26,subbu nagar-1 , Anna Nagar Ward No - 29, sankaran street -1, sankaran street -2, sankaran street -3 in Ward No -30 in Gobichettipalayam Municipality | 1.91 | 4.20,4.30, 4.50,5.50, 7.00 | 100.00 |
| | | **Total** | **8.457** | | **500.00** |

**ந.க.எண் .2819/ 2021 / இ1**

]அலுவலக குறிப்பு :– 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மதிப்பீட்டினை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

2). நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 12.11.2021 ஆம் நாளிட்ட தொலைபேசி செய்தியின் உத்திரவின் படி இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலிருந்து ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், ஒரு ஓட்டுனர் 20 தூய்மை பணியாளர்கள் ஒரு டிப்பர் லாரியுடன் தலைநகர் சென்னையில் புயல் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்படைந்த பகுதிகளை சுத்தம்செய்ய மற்றும் வெள்ள நீரை அகற்ற சென்னைக்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்கள் சென்னையில் தங்கி பணி செய்யும் பொருட்டு சென்னைக்கு செல்லுதல் அவர்களின் உணவு தங்குமிடம் போக்குவரத்து மற்றும் இதர செலவினத்திற்கு ஒரு நபர்க்கு தொகை ரூ.3000/– ம் வீதம் 22 நபர்களுக்கு ரூ.66000/– ஐ இந்நகராட்சியிலிருந்து பணி மேற்பார்வை செய்ய சென்னை செல்லும் திரு.எஸ்.சக்திவேலு துப்புரவு பணி மேற்பார்வையாளருக்கு முன்பணமாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2844/2021/எச் 1)

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

3). நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 40 கடைகளுக்கு 12.11.2021ந் தேதியன்று நான்காவது முறையாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. புதியாஸ்பத்திரி வீதி கடை எண்.1, 6, 7 மற்றும் 8.
2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 43, 48, 53, 54, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
4. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20.
5. பழைய பேருந்து நிலைய IUDP கடை எண். 8
6. வாரச்சந்தை கடை எண்.1, 2, 3, 29 மற்றும் 31
7. பழைய ஆஸ்பத்திரி வீதி கடை எண். 16, 12
8. பழைய ஆஸ்பத்திரி வீதி கோழி கடை எண். 2, 3
9. கருமாயா எக்ஸ்டன்சன்– 3, காலியிட கோழி கடை
10. பழைய பேருந்து நிலையம் MUDP கடை எண். 4

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | குழு பரிந்துரை செய்த மாத வாடகை ரூ. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | | [5] |
| 1 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 54 | ஆர்.சண்முகம் த/பெ. ரங்கசாமி, 66/3, முத்து நகர், காட்டுவலவு, பெரியமொடச்சூர், கோபி | 1,500/– | 1,550/– | இல்லை |
| | | கே.இளங்கோவன் த/பெ. கிருஷ்ணசாமி, 3, ஜோதி நகர் எக்ஸ்டன்சன், கோபி | 1,500/– | **1,650/–** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கருமாயா எக்ஸ்டன்சன் –3, கோழி கடை | கே.செந்தில்குமார் த/பெ. கனகராஜ், குப்பாண்டார் வீதி –3, புதுப்பாளையம், கோபி | 1,000/– | 1,200/– | இல்லை |
| | | பி.கிருஷ்ணமூர்த்தி த/பெ. பழனி, 101, ஸ்ரீராமபுரம், கோபி | 1,000/– | 700/– | |
| 3 | பழையாஸ்பத்திரி வீதி கோழி கடை எண். 3 | க.காந்திமூர்த்தி த/பெ. கருணாகரன், 49, தங்க மலைக்கரடு, கலிங்கியம், கோபி 638452 88074 83395 | 1,900/– | 1,958/– | இல்லை |
| | | எம்.பி.கருணாகரன் த/பெ. பழனியப்பன், 49, தங்க மலைக்கரடு, கலிங்கியம், கோபி 638452 97159 70276 | 1,900/– | 951/– | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்

1. வரிசை எண். 1 பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 54 க்கு திரு.ஆர்.சண்முகம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,500/– ஐ விட கூடுதலாக ரூ.150/– சேர்த்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.1,650/– கோரியுள்ள திரு.கே.இளங்கோவன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. வரிசை எண். 2 கருமாயா எக்ஸ்டன்சன் – 3 கோழி கடைக்கு திரு.பி.கிருஷ்ணமூர்த்தி என்பவர் குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,000/–ஐ விட குறைவாக ரூ.700/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். திரு.கே.செந்தில்குமார் என்பவர் குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,000/– ஐ விட கூடுதலாக ரூ.200/– சேர்த்து ரூ.1,200/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே திரு.கே.செந்தில்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்
3. வரிசை எண். 3 பழையாஸ்பத்திரி வீதி கோழி கடை எண். 3 க்கு திரு.எம்.பி.கருணாகரன் என்பவர் குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,900/– ஐ விட குறைவாக ரூ.951/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். திரு.க.காந்திமூர்த்தி என்பவர் குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,900/– ஐ விட கூடுதலாக ரூ.58/– சேர்த்து ரூ.1,958/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே திரு.க.காந்திமூர்த்தி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்
4. மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

ந..எண். 301/2021/அ3

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ஓம்.திரு.ஜெ.பிரேம் ஆனந்த்
தனி அலுவலர்

// உண்மை நகல் // உத்திரவுப்படி //

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 19.11 2021ம் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்

## தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகம் பொறியியல் பிரிவில் உள்ள UPS பேட்டரி – 2 எண்கள் திறன் இழந்துவிட்டது. அதனால் மின்தடை ஏற்படும் போது மின்சப்ளை இல்லாமல் உள்ளது. பணி நேரத்தில் மின்தடை ஏற்படுவதால் பணிகள் தடைபடுகிறது.எனவே, கீழ்கண்டுள்ள வகையில் 2 எண்கள் புதிய பேட்டரி வாங்கி பொருத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Quantity | Description | Rate | Amount |
|---|---|---|---|---|
| 1. | 2 Nos | SF Sonic Battery – 200 Ah<br>36 Month Warranty | 18000/- | 36000/- |

ந.க.எண்.2925/2021/இ1

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மன்ற அனுமதியை எதிர்நோக்கி அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகம் பொதுப்பிரிவு மற்றும் வரி வசூல் மையம் ஆகியவற்றில் உள்ள Battery –2 Nos அதற்கான Inverter திறன் இழந்து இயக்க முடியாமல் உள்ளது. மின் தடை நேரங்களில் இதனால் பணிகள் தடைபடுகிறது.தற்போது தேர்தல் காலமாக உள்ளதால் பணிகள் தடையின்றி நடைபெற கீழ்கண்டுள்ளபடி பேட்டரி மற்றும் Inverter வாங்கி பொருத்த வேண்டியுள்ளது.

| Sl.No | Quantity | Description | Rate | Amount |
|---|---|---|---|---|
| 1. | 2 Nos | SF Sonic Battery – 200 Ah<br>36 Month Free Warranty | 18000/- | 36000/- |
| 2. | 1 No | UPS JMB 3000/24V<br>24 Month Warranty | 18500/- | 18500/- |
| Total | | | | Rs.54500/- |

மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. ந.க.எண்.2926/2021/இ1

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஜோதி நகர் எக்ஸ்டன்சன் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆபத்தான நிலையில் உள்ள ஒரு தென்னை மரத்தை வெட்டி அப்புறப்படுத்தி எடுத்துக்கொள்ளும் பணிக்கு 17.11.2021 அன்று நடந்த பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.625/- (ரூபாய் அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) திரு.P. மகுடேஸ்வரன் S/o பழனிசாமி வாய்க்கால் ரோடு, கோபி என்பவர் கோரியுள்ளார். மேற்படி ஏலத்தை இறுதி செய்திட மனற்த்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.2713/2021/இ1

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி ஆபத்தான நிலையில் உள்ள ஒரு தென்னை மரத்தினை வெட்டி அகற்றிடும் பணிக்கான ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ.625/- கோரியுள்ள திரு.P.

மகுடேஸ்வரன் S/o பழனிசாமி வாய்கால் ரோடு, கோபி என்பவரது ஏலத்தினை அங்கீகரிக்கலாம்.

2. அவசியம் கருதியும், பொதுமக்களின் பாதுகாப்பு கருதியும் மன்றத்தின் அமைதியை எதிர்நோக்கி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய திரு.P. மகுடேஸ்வரன் என்பவருக்கு மரத்தினை அகற்றித்தரும் பணிக்கான உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/2021/AMRUT-2.0 நாள்.13.11.2021 இல் தெரிவித்துள்ளபடி கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 2020-21 ஆண்டிற்கு Tied Grant – 147.00 Lakhs ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி வரப்பெற்றுள்ளது.மேற்படி நிதியில் ஏற்கனவே ரூ.21.00 இலட்சத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி (Bio Mining) எடுக்கப்பட்டுள்ளது.

விதிமுறைகளின் படி வரப்பெற்ற நிதியில் 50% (ரூ.73.50 இலட்சம்) திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கும் மீதமுள்ள 50% (ரூ.73.50 இலட்சம்) குடிநீர் திட்டப்பணிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் படி Tied Grant 50% ரூ.73.50 இலட்சத்தில் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டிலான Bio Mining பணி போக மீதமுள்ள தொகையில் கீழ்கண்டுள்ள பணிகள் **திடக்கழிவு மேலாண்மை** திட்டத்தில் எடுத்துக் கொள்ளவும்.

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு Front End Loader இயந்திரம் வாங்குதல் (purchase of New Front End Loader heavy duty with back hoe XTRA Excavator –Loader (3dx) 1 No (JCB) | ரூ.30.00 |
| 2. | Repair and Maintenace of BOV | ரூ.10.50 |
| 3. | Purchase of Light Commercial Vehicles –2 No's | ரூ.12.00 |
| | மொத்தம் | ரூ.52.50 |

மீதமுள்ள Tied Grant 50% ரூ.73.50 இலட்சத்தில் கீழ்கண்டுள்ள பணிகள் **குடிநீர் திட்டத்தில்** எடுத்துக்கொள்ளப்படவும்,

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கைபம்புகளை மினி பவர் பம்புகளாக மாற்றம் செய்து குழாய் நீட்டிப்பு செய்தல் வார்டு எண்.1, 22, 23 மற்றும் 24 மொத்தம் 10 இடங்கள் | ரூ.15.00 |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.01 ஸ்ரீ வித்யா பள்ளி பொது கழிப்பிடத்திற்கு புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் | ரூ.2.00 |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் .1 வாய்க்கால் ரோட்டில் பழுதடைந்த நிலையில் உள்ள சிறுபாலத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக சிறுபாலம் அமைத்தல் பணி | ரூ.2.20 |

| | | |
|---|---|---|
| 4. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோக திட்டத்திற்கு SS Clamp –கள் விநியோகம் செய்யும் பணி | ரூ.2.25 |
| 5. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோக திட்டத்திற்கு குழாய்கள் மற்றும் உதிரிபாகங்கள் விநியோகம் செய்யும் பணி | ரூ.2.00 |
| 6. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | ரூ.2.50 |
| 7. | மொடச்சூர் ரோடு வாரச்சந்தை அருகில் ஆர் .சி.சி.பாலம் அமைத்தல் | ரூ.2.50 |
| 8. | வார்டு எண் .9 வடக்கு பார்க் 20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்கத்தொட்டி வளாகத்தில் மழையினால் சேதமடைந்த பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்தல் | ரூ.2.20 |
| 9. | வார்டு எண் .15 கோபிசெட்டிபாளையம் புதிய அரசு மருத்துவமனை வீதியில் ஆர்.சி.சி.பாலம் அமைத்தல் | ரூ.2.50 |
| 10. | வார்டு எண் .30 செங்கோட்டையன் காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் ஆர்.சி.சி.பாலம் அமைத்தல் | ரூ.2.50 |
| 11. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் பெய்த மழையினால் சேதமுற்ற வார்டு எண் .1 முதல் 15 வரையிலான சாலைகளுக்கு Patch Work செய்யும் பணி (Wet Mix Macadam and Bitumen Patch) | ரூ.5.00 |
| 12. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் பெய்த மழையினால் சேதமுற்ற வார்டு எண் .16 முதல் 30 வரையிலான சாலைகளுக்கு Patch Work செய்யும் பணி (Wet Mix Macadam and Bitumen Patch) | ரூ.5.00 |
| | மொத்தம் | ரூ.45.65 |

மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.2920/2021/இ1)

அலுவலக குறிப்பு:–

1. மேற்காணும் பணிகள் 15 வது நிதிக்கழு மான்யம் Tied Grant 2020–2021 இல் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியில் வரிசை எண்.1 மற்றும் 3 இல் கண்டுள்ள பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிளுக்காக கீழ்கண்டுள்ள வாகனங்கள் தேவைப்படுகிறது.

| S.No | Description | Nos | Est Amount in Lakhs |
|---|---|---|---|
| 1. | Front End Loader Heavy Duty with back hoe Xtra Excavator Loader (3 dx) (JCB) | 1No | 30.00 |
| 2. | Purchase of LCV | 2Nos | 12.00 |

மேற்படி வாகனங்களில் வரிசை எண் 1 இல் கண்டுள்ள Front end Loader (JCB) திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் மற்றும் இந்நகராட்சி பகுதியில் மழைக்காலங்களில் கீரிபள்ளம்

ஓடையில் ஏற்படும் வெள்ளத்தினை கட்டுப்படுத்திட 'Desilting' பணியினை மேற்கொள்ள அத்தியாவசியமாகிறது. மேலும், இந்நகராட்சி பணிகளுக்கும் அவசரப்பணிகளுக்கு பயன்படுத்திடவும், பேரிடர் காலங்களில் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. இரண்டு LCV வாகனங்களும் SWM பணிகளுக்கு அவசியமாக தேவைப்படுகிறது. எனவே, மேற்படி வாகனங்களை 15TH CFC 2020–21 ஆம் ஆண்டு Tied –Grant நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடம் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி வழங்கலாம்.

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 57 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி M/s. S.S Engineers, 3/6, Kamadenu Nagar, Vadavalli, Coimbatore –641041 அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர், அவர்களின் செயல்முறை ந.க.எண்.1231/2020/எச்1 நாள்.01.03.2021 இன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.545.50/– (ESI and EPF உள்பட) என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தினமும் 57 DBC பணியாளர்களை இந்நகராட்சிக்கு வழங்க M/s. S.S Engineers, 3/6, Kamadenu Nagar, Vadavalli, Coimbatore –641041 அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தி இந்நகராட்சியில் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதன் பலனாக கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாளது தேதி வரை எந்தவொரு நபரும் டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 30.11.2021 ஆம் தேதியுடன் முடிவடையும் நிலையில் ஒப்பந்த காலத்தினை பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும் M/s. S.S Engineers, 3/6, Kamadenu Nagar, Vadavalli, Coimbatore –641041 அவர்களின் ஒப்பந்த காலத்தினை 01.12.2021 முதல் 31.12.2021 ஆம் தேதி வரை கால நீட்டிப்பு செய்து கொள்ளவும்,மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.545.50/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 57 DBC பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.9.63/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1231/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

ஓம்.திரு.ஜெ.பிரேம் ஆனந்த்
தனி அலுவலர்

// உண்மை நகல் // உத்திரவுப்படி //

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 30.11. 2021ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
## தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர் –2021 ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் –2021 ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் அக்டோபர் –2021 ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் அக்டோபர் –2021 ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டு D, பிளாக் – 20, நகரளவை எண். 9/1, 9/2, 10/1, 10/2, 23, 24/1, 24/2, 25/1 மற்றும் 25/2, சர்வே எண். 244பி, 247/1 மற்றும் 247/3 இல் உள்ள 385 செண்ட் (3.85 ஏக்கர்) காலியிடத்தினை முழுமைத்திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு 19.08.2020 ஆம் நாளிட்ட வி.கே. குமரேசன் மற்றும் 4 நபர்களால் கோரப்பட்டது. மேற்காணும் விண்ணப்பத்துடன் வரப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் 30.09.2020 ஆம் நாளிட்ட நகரமைப்பு ஆய்வர் ஆய்வுக்குறிப்பின் படியும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உபயோக மாற்றம் தொடர்பான கருத்துருக்கள் மற்றும் ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு செயலர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பிட நகர்மன்ற தீர்மானம் எண். 92 நாள். 10.09.2020 இல் நகர்மன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்காணும் நகர்மன்றத்தின் ஒப்புதலின் பேரில் மேற்காணும் கருத்துருவை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு, மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு செயலர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1886/2020/எப் 1 நாள். 30.09.2020 இல் கருத்துரு அனுப்பப்பட்டது. இதனை அடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண். 1668/2020/ஈம2 நாள். 19.10.2020 இல் நில உபயோக மாற்றம் குறித்து பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் உள்ளூர் திட்ட குழுமத்தால் பிரசுரம் செய்த விவரத்தையும், மேற்படி செய்தி தாள் வெளியிடப்பட்டு 30 நாட்கள் முடிவுற்ற பின்னர் நிறைவேற்றப்பட்ட நகராட்சி தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி நில உபயோக மாற்றம் தொடர்பாக பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனையை 30 நாட்களுக்குள் எழுத்து பூர்வமாக தெரிவிக்க கோரி 12.11.2020 ஆம் நாளில் AFTERNOON ஆங்கில நாளிதழ் மற்றும் மாலைமுரசு தமிழ் நாளிதலில் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்கண்டவாறு விளம்பரபடுத்தப்பட்ட 30 நாட்களுக்குள் பொது மக்களிடமிருந்து எவ்வித ஆலோசனையோ மற்றும் ஆட்சேபனையோ ஏதும் பெறப்படவில்லை. எனவே, 30.09.2020 இல் நிலஉபயோக மாற்றம் தொடர்பான கருத்துருவினை வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு செயலர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1886/2020/எப்1

நாள்.31.12.2020 இல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் கருத்துரு அனுப்பப்பட்டது.

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2055/2021/டிசிபி4 நாள்.07.10.2021 இல் பிரஸ்தாப இடமானது கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இல் அமைவது அறியப்பட்டது. முழுமைத்திட்டமானது 1998 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.விரிவு அபிவிருத்தி திட்டமானது 2000 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி விரிவு அபிவிருத்தி திட்டம் தான் சமீபித்திய திட்டமாகும். TNCDBR 2019 விதி 16(3) ன் படி பிரஸ்தாப திட்டமானது திட்ட மாற்றம் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டால் போதுமானது . அதனை தொடர்ந்து பிரஸ்தாப நிலப்பயன் மாற்றம் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் பெறப்பட வேண்டும் என நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண்.4720/2021/ஈமா2 நாள்.01.11.2021 இல் இந்நகராட்சி தீர்மான எண்.92 நாள்.10.09.2020 மற்றும் நகர்மன்றத்தீர்மான எண்.163 நாள்.23.12.2020 க்கு மாற்றாக கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இல் திட்ட மாற்றம் செய்வது குறித்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.1886/2020/எப்1

அலுவலக குறிப்பு :–

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண்.4720/2021/ஈமா2 நாள்.01.11.2021 இல் அறிவுறுத்தியவாறு நகர் மன்றத்தீர்மான எண்.92 நாள்.10.09.2020 மற்றும் நகர்மன்றத்தீர்மான எண்.163 நாள்.23.12.2020 க்கு மாற்றாக வீரபாண்டி கிராமம் புல எண்.244பி, 247/1 மற்றும் 247/3 வார்டு –D, பிளாக் –20, நகரளவை எண்.9/1, 2, 10/1, 2,3, 24/1,2, 25/1,2 இல் 3.85 ஏக்கர் விவசாய உபயோக நிலத்தை குடியிருப்பு உபயோகமாக விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இல் மாற்றம் செய்யவும், மன்றம் அனுமதிக்கலாம்.

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் கிராமம் வார்டு –C, பிளாக் –17, T.S.No. 3/2, 3/3,3/4 (பழைய க.ச.எண்.91 ) இல் உள்ள 1.10 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான உத்தேச சாலைகள் பரப்பு, பொது உபயோகம் ஆகியவற்றினை உள்ளாட்சிக்கும் T NGEDCO விற்கு உரிய இடத்தினை மின்வாரியத்திற்கு அல்லது தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யுமாறு திருமதி.ஜி.மிருதூபாசினி மற்றும் சிலர் என முகவரியிட்டு மற்றும் ஆணையருக்கு நகலிட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.581/2021/ஈ.மா2 நாள்.08.03.2021 இல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றது.

மேற்படி மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு வரைபடத்திற்கு அனுமதி வழங்கியும் மனைப்பிரிவில் தார்சாலையாக அமைத்தும், வடிகால் வசதி ஏற்படுத்தியும், பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக பெற்று உள்ளாட்சியின் தீர்மானம் மற்றும் தானப்பத்திரம் மற்றும் அதன் நகலினை நோட்டரி பப்ளிக் சான்றொப்பம் ஆகியவற்றுடன் சாலைகள் தரமானதாக அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான நகராட்சி பொறியாளரின் சான்றுடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடுஅவர்களின் செயல்முறை ந.க.எண்.581/2021/ஈ.மா.2 நாள்.07.04.2021 மேற்படி உத்தேச மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவில் உள்ள நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது.என்றும் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ஈ.மா.எண்.76/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமதி.ஜி.மிருதுபாசினி மற்றும் 3 நபர்கள் இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.563/2021/எப்1 நாள்.11.05.2021 இல் குறிப்பிட்டு குறைகளை நிவர்த்தி செய்துவிட்டதாகவும் உரிய கட்டணங்கள் அனைத்தும செலுத்திவிட்டதாகவும் அதற்காக புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே இதனை ஆய்வு செய்து மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கோரப்பட்டது.

இதனை அடுத்து கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொறியாளர் அவர்களின் 18.10.2021 ஆம் நாளிட்ட குறிப்பின் படி மேற்படி மனைப்பிரிவில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி பகுதிக்கு ஏற்கனவே உள்ள விநியோக குழாயில் இணைப்பு மற்றும் உள் இணைப்பு செய்ய அப்பகுதி குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டு அதன் பின்பு தான் இணைப்பு வழங்கப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் 18.10.2021 ஆம் நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவின் சாலை அமைப்பு வரைபடத்தின் படி தார் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது என 18.10.2021 இல் நகராட்சி பொறியாளரால் சான்றளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு நுழைவு வாயிலுக்கு பிரியும் சாலைக்கு முன்பகுதியில் மின் கம்பம் ஏற்கனவே மும்முனை இணைப்பு உள்ளது என்றும் எனவே மனுதாரர் அவர்களின் மனையில் உள்ள சாலையின் தெரு விளக்கு அமைப்பதற்கு ஏதுவாக புதிதாக மின் கம்பங்கள் அமைத்து அதில் 15 வார்ட்ஸ் எல்.ஈ.டி தெரு விளக்குகள் அமைப்பதற்காக தமிழ்நாடு மின்சாரிய வாரியத்திற்கு ஆணையர் பெயரில் மனுதாரரால் சொந்த செலவில் அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக ந.க.எண்.562/2021/இ1 நாள்.18.10.2021 இல் கடிதம் அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழ் நாடு மின்சார வாரியம் உதவி மின் பொறியாளர் கோபிசெட்டிபாளையம். அவர்களின் கடிதம் எண்.உ.மி.பொ/இ மற்றும் பே/புதுப்பாளையம்/வ.ஆ/கோ.துணி/எண். /2021-22 நாள்.11.11.2021. இல் ரூ.54780/- செலுத்தப்பட வேண்டும். என தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மனுதாரர் ஆணையர் பெயரில்தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக லிமிடெட் இரசீது எண். ERG3071D1022,2243613 நாள். 11.11.2021 இல் ரூ. 54780/- செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு உத்தேச மனைப்பிரிவிற்கான சாலை, பூங்கா ஒதுக்கீட்டிற்கான இடம் மற்றும் பொது உபயோகத்திற்கான இடங்களை மனுதாரரால் ஆவண எண்.1152 மற்றும் 1153 நாள்.23.03.2021 இன் படி தானமாக மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் உள்ள நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை மனுதாரர் உட்பிரிவு செய்வதற்கான தொகையினை வருவாய் துறையினருக்கு செலுத்தி மனுதாரரரின் சொந்தப் பொறுப்பில் ஆணையாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் மனை உட்பிரிவு செய்து தர வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் செயல்முறை ந.க.எண்.581/2021/ஈ.மா2 நாள்.07.04.2021 இல் குறிப்பிட்டுள்ள ம.வ/ஈ.மா எண்.76/2021 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் இந்நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப் பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.( ந.க.எண்.563/2021/எப்1)

அலுவலகக்குறிப்பு :

1. மேற்படி மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், ஈரோடு அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவில் நகராட்சிக்கு மனுதாரர்களால் தானமாக ஒப்படைக்கும் சாலைகள் மற்றும் பொது இடங்களை நகரளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.மேலும் மேற்படி நிலத்தில், கம்பிவேலி அமைத்து சொந்தமான நகராட்சி நிலம் என பெயர் பலகை வைக்க வேண்டும்.

3. மேற்படி மனைப்பிரிவில் குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் குறித்த நகராட்சி பொறியாளரின் குறிப்பில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மன்றம் அனுமதிக்கலாம்.

4. மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சிக்கு தானசாசனமாக பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

5. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில் நுட்ப ஓப்புதல் வழங்கப்பட்ட, உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நகராட்சியால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-22 - இன் கீழ் ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் வாட்டு எண்-3 ராமர் எக்ஸ்டன்சன் -2 பகுதியில் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் ஒரு நாள் ஒரு தடவை மட்டும் விளம்பரம் செய்து கொடுத்தமைக்கு கட்டணம் ரூ.6426/- (ரூபாய் ஆறாயிரத்து நானூற்று இருபத்து ஆறு மட்டும்) 'KAL PUBLICATIONS (P) LTD' என்ற நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. ந.க.எண்.2548/2021/இ1

அலுவலக குறிப்பு:- 1. மனற்ம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்ச பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவிற்கு 2-எண்கள் UPS பேட்டரி (SF Sonic - 200 Ah - 36 Months Warranty )விநியோகம் செய்து தரும் பணிக்கு 26.11.21 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Sri Ragaventhira Automobiles,<br>3A, Bajanai Koil St,Gobi | - | Rs.36,000/- |
| 2. | Shree Ragaventhira Electro Equipments (p) Ltd,<br>4/397, Muthu Kali Madai, Gobi | - | Rs.36,500/- |
| 3. | Sri Batteries, 387, Kullampalayam Pirivu<br>Gobichettipalayam | - | Rs.37,500/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்திட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.2925/2021/இ1)

அலுவலக குறிப்பு:- 1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள Sri Ragaventhira Automobiles, 3A, Bajanai Koil St,Gobi என்பவரது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள வரி வசூல் மையத்திற்கு

(i) SF Sonic Battery 2Nos (200 Ah - 36 Months Warranty)
(ii) UPS JMB (3000/24 Volt - 24 Months Warranty) விநியோகம் செய்யும் பணிக்கு 26.11.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Sri Ragaventhira Automobiles,<br>3A, Bajanai Koil St,Gobi | - | Rs.54,500/- |
| 2. | Shree Ragaventhira Electro Equipments (p) Ltd, | - | Rs.55,500/- |

4/397, Muthu Kali Madai, Gobi

3. Sri Batteries, 387, Kullampalayam Pirivu – Rs.57,000/–
Gobichettipalayam

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்திட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– 1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ரூ.54500/– அளித்துள்ள 'Sri Ragaventhira Automobiles,3A, Bajanai Koil St,Gobi' என்பவரது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22 ன் கீழ் வார்டு வார்டு எண் –3 ராமர் எக்ஸ்டன்சன் 2 இல் பூங்கா மேம்பாடு செய்யும் பணியினை ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.151 நாள்.24.09.2021 –ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 25.11.2021 –ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பு ரூ. | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர். லோகு கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், கோபிசெட்டிபாளையம் . | **4254432.94** | **6.38 %** மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம் (**ரூ. 4041350.00**) |
| 2 | திருவாளர். ரத்னா &கோ, ஒப்பந்ததாரர், T.N.பாளையம் | | **9.89 %** மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம் (**ரூ. 4464322** ) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 6.38 சதவீதம் அதிகம்) வழங்கியுள்ள **திருவாளர். லோகு கன்ஸ்ட்ரக்சன்**, அவர்களிடம் 26.11.2021 ம் தேதி விலை குறைப்பு செய்து அளித்திட கடிதம் வழங்கப்பட்டதில் 29.11.2021 தேதியன்று ஒப்பந்தாரர் திருவாளர். லோகு கன்ஸ்ட்ரக்சன், கோபிசெட்டிபாளையம் அவர்கள் 6.38% லிருந்து 4.93 சதவீதம் மதிப்பீட்டு விலை விகதத்தை விட அதிகமாக தர விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2548/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :–**

1. பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி **திருவாளர். லோகு கன்ஸ்ட்ரக்சன்,** அவர்களால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.93 சதவீதம் அதிகம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டினை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

11. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 16.11.2021 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள இரு குளோரின் கேஸ் பிளாண்ட்களையும் ஆண்டு பராமரிப்பு செய்து தரும் பணி . | 1,90,000 | **I Tech Systems** ஒப்பந்ததாரர் | 0.72 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | SRIDHARAN CHEMICALS ஒப்பந்ததாரர் | 8.70 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **I Tech Systems** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

12. இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் கழிவுகளை வீடுவீடாக சென்று தரம்பிரித்து சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் மறு சுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், இரப்பர் தோல்பொருட்கள், உடைந்த மரக்கட்டைகள், உடைந்த மரச்சாமான்கள், பழைய மிதியடிகள், மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்திட இன்ஸ்னிரேட்டர் வசதி இந்நகராட்சியில் இல்லாததால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கழிவுகளை M/s. UlTRA Tech Cement Factory, Ariyalur, M/s.Dalmia Cement Factory. Dalmapuram, M/s ACC Cement Factory, மதுக்கரை, கோயம்புத்தூர், அவர்களுக்கு ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான சரக்கு ஏற்றிச்செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் 04.12.2021 முதல் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டு சென்று இறுதியாக்கம் (Final Disposal of Combustible Wastes) செய்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது மழைக்காலங்களாக உள்ளதால் கொசுக்கள் உற்பத்தியாகி கொசுவினால் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை சிறப்பு கவனம் செலுத்தி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சியின் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு பின்வரும் விபரப்படி விழிப்புணர்வு நோட்டீஸ், ஸ்டிக்கர்கள், சுவரொட்டிகள் மற்றும் அளவீட்டு பதிவேடு படிவங்கள் போன்றவற்றை கொள்முதல் செய்து நோய் தடுப்பு பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தேவைப்படும் படிவங்களின் விபரங்கள் :

| வ. எண். | விபரம் | எண்ணிக்கை | விலைப்புள்ளி விலை விகிதம் (Including GST 18%) ரூ. |
|---|---|---|---|
| 1. | டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு மல்டிகலர் நோட்டீஸ் | 1000 – ற்கு | 7,670/– |
| 2. | டெங்கு காய்ச்சல் பற்றிய மாதாந்திர கணக்கெடுப்பு 52 வார வருடாந்திர காலண்டர் டோர் மல்டி கலர் ஸ்டிக்கர் | 1000 – ற்கு | 7,670/– |

| | | | |
|---|---|---|---|
| 3. | ஏடிஸ் கொசுப்புழு இல்லாத வீடு Smily டோர் மல்டி கலர் ஸ்டிக்கர் | 1000 – ற்கு | 7,670/– |
| 4. | டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு மல்டிகலர் சுவரொட்டிகள் | 1000 – ற்கு | 2,950/– |
| 5. | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் தினசரி பணி அளவீட்டு பதிவடு படிவம் | 1000 – ற்கு | 2,950/– |

மேற்குறிப்பிட்ட படிவங்களை TAMIL NADU MULTIPURPOSE INDCO SERVE, Shop No. 107, First Floor, N.S. Complex, No.25–A, Sundaradas Tank Street, Thiruchirappalli – 620 008. என்னும் கூட்டுறவு பண்டகசாலையில் மேற்குறிப்பிட்ட விலைவிகிதத்தில் நேரடியாக அவ்வப்போது தேவைக்கேற்ப தேவைப்படும் எண்ணிக்கையில் படிவங்கள், ஸ்டிக்கர்கள், சுவரொட்டிகள் மற்றும் அளவீட்டுப்படிவங்களை அச்சடித்து கொள்முதல் செய்வதற்கும், இப்பணியினை ரூ. 2,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 2230/2021/எச் 1

**அலுவலக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

14. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 **(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)**விதி 5 , துணை விதி (1) ன் மூலம் கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக **(Electronic Service Delivery System)** அமைப்பின் கீழ் **https://tnurbanepay.tn.gov.in/**என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| **வரிசை எண்** | **மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி** |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| | | v | தொழிற்சாலை பயன்பாடு பாதாளசாக்கடை இணைப்புக்கான தடையின்மை சான்று<br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம்<br>Layout Approval Payment | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிம கட்டணம்<br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம்<br>(12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம்<br>(1200 சதுரஅடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | |
| | | xiii | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர்கள்/ டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு – தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம்புதுப்பித்தல் – தேடல்<br>Trade Renewal – Search | |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரி விதிப்பு முழுவிவரம் | |
| | | | View Assessment History | |
| | | ii | வரி விதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரிவிதிப்புக்கான கோரிக்கை மீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் | i | எனது சான்றிதழ் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இறப்பு<br>Birth & Death | | My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

**ந.க.எண்.3123/2021/சி1**

**அலுவலக குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய உத்தேச செலவினத்தொகை ரூ.20,000 க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 கன்னிகாபரமேஸ்வரி எக்ஸ்டன்சன், வார்டு எண்.23 சிவசண்முகம் வீதி மற்றும் வார்டு எண்.19, கருப்பண்ணன் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின்விசைபம்பு சின்டெக்ஸ் தொட்டி பழுதடைந்துள்ளது. இதனால் தண்ணீர் வீணாகிறது.ஆகவே மேற்படி சின்டெக்ஸ் தொட்டியினை புதிதாக மாற்றி அதன் குழாய் உதிரிபாகங்கள் மாற்றி வார்டு எண்.13, கன்னிகா பரமேஸ்வரி எக்ஸ்டன்சன் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செது புதுபிக்கும் பணி மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர மதிப்பீட்டு செலவினம் ரூ.1.25 இலட்சம் ஆகும்.மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

16. இந்நகராட்சி 2021–2022 ம் ஆண்டுக்கான வீட்டுவரி காலியிட வரி, தொழில்வரி, குத்தகை இனங்களில் வசூல் தீவிரப்படுத்தும் முகமாக பொது மக்களை வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்த கோரி ஆட்டோ மூலம் மைக் வைத்து 30 நாட்களுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.7500/– ஐ பொது நிதியில் மேற்கொள்ளவும் உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று விளம்பரம் செய்திட அனுமதிக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

17. இந்நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும் கோவிட் 19 நோய் தடுப்பு பணிகளுக்கு பொது மக்களிடையே தடுப்பூசி போடப்படுவதன் அவசியம் மற்றும் போடப்படும் இடங்கள் மற்றும் தேதிகள் விழிப்புணர்வு ஏற்படுத்த Flex Boards கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து பொது இடங்களில் விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் பொருத்தியும், மக்கள் கூடும் இடங்களில் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான பிளக்ஸ் போர்டுகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கும் பணிக்கு 17.09.2021 ஆம் தேதி அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

1. விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் தயார் செய்து வழங்கும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணியின் விவரம் | விலைப்புள்ளி (ரூ.) |
|---|---|---|---|
| 1 | Stroke Digital,<br>5, Muthusha Street,<br>Gobichettipalayam. | 8" X 6" அளவுள்ள ப்ளக்ஸ் பேனர் + டிசைனிங் + Four Side Iron Peading கொண்ட tpopg;Gzh;T Flex – தயார் செய்து வழங்க ஒன்றிக்கான tpiy | ரூ. 730 /– |
| 2 | அர்ஜூன் ஆர்ட்ஸ்,<br>தேவேந்திரன் நகர்,<br>அளுக்குளி,<br>கோபிசெட்டிபாளையம் | 8" X 6" அளவுள்ள ப்ளக்ஸ் பேனர் + டிசைனிங் + Four Side Iron Peading கொண்ட tpopg;Gzh;T Flex – தயார் செய்து வழங்க ஒன்றிக்கான tpiy | ரூ. 780 /– |
| 3 | பரணி ஆர்ட்ஸ்,<br>63, பாரதி வீதி,<br>கோபிசெட்டிபாளையம் | 8" X 6" அளவுள்ள ப்ளக்ஸ் பேனர் + டிசைனிங் + Four Side Iron Peading கொண்ட tpopg;Gzh;T Flex – தயார் செய்து வழங்க ஒன்றிக்கான tpiy | ரூ. 755 /– |

2. விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் தயார் செய்து வழங்கும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணியின் விவரம் | விலைப்புள்ளி ஒன்றின் விலை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | தென்றல் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>68, துரையப்பா வணிகவளாகம்,<br>கோபிசெட்டிபாளையம். | A4 Size இல் ஒரு பக்கம் பிரிண்டிங் செய்து 1000 விழிப்புணர்வு பிரதிகள் விநியோம் செய்வதற்கான விலைவிகிதம் | ரூ. 1150 /– |
| 2 | திரு. ஏ. முருகேசன்,<br>ஸ்ரீராம் கம்ப்யூட்டர் ஆப்செட்,<br>141/54, மில் ரோடு, மொடச்சூர்,<br>கோபிசெட்டிபாளையம் | A4 Size இல் ஒரு பக்கம் பிரிண்டிங் செய்து 1000 விழிப்புணர்வு பிரதிகள் விநியோம் செய்வதற்கான விலைவிகிதம் | ரூ. 1050 /– |
| 3 | ஸ்ரீ லட்சுமி புக் பைண்டிங் ஆப்செட்,<br>26 ஏ, பாரதி வீதி,<br>லில்லி புட் பள்ளி (எதிரில்),<br>கோபிசெட்டிபாளையம் | A4 Size இல் ஒரு பக்கம் பிரிண்டிங் செய்து 1000 விழிப்புணர்வு பிரதிகள் விநியோம் செய்வதற்கான விலைவிகிதம் | ரூ. 1100 /– |

விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் தயார் செய்து விநியோகம் செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் கண்டுள்ள Stroke Digital, 5, Muthusha Street, Gobichettipalayam அவர்களின் விலைப்புள்ளி விலை விகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அவர்களிடம் Flex Board கள் தயார் செய்து கொள்ளவும்,

விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விநியோகம் செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 2 இல் கண்டுள்ள திரு.ஏ. முருகேசன், ஸ்ரீராம் கம்ப்யூட்டர் ஆப்செட், 141/54, மில் ரோடு, மொடச்சூர், கோபிசெட்டிபாளையம்அவர்களின் விலைப்புள்ளி விலை விகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அவர்களிடம் விழிப்புணர்வு பிரதிகள் அச்சடித்து பணி மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.997/2021/எச்1**

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி குறைவான விலைப்புள்ளி விகிதம் வழங்கிய நிறுவனங்களிடமிருந்து, முகாம் நடைபெற்ற மூன்று நாட்களில் விழிப்புணர்வு பிரதிகள் மொத்தம் 13000 எண்ணிக்கையும், 8' X 6' சைஸ்யில் விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் 20 எண்ணிக்கையும் அச்சடித்து பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

18. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 16.11.2021 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் வார்டு எண் 20 பச்சமலை சாலையில் உள்ள பயன்படுத்தாத Namma Toilet –ஐ அப்புறப்படுத்தி பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் வாரச்சந்தை வளாகத்தில் உரிய வசதிகளுடன் Namma Toilet அமைக்கும் பணி | 2,50,000 | M/s. **சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் | 1.34 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 22. ஜின்னிங் பேக்டரி வீதியில் உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கம்பி வேலி (Chain Link Fencing ) அமைத்தல் பணி | 40,000 | M/s. **சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் | 1.35 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

(ந.க.எண்.2712/2021/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

.மேற்படி பணிகளில் வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **SANJAY ELECTRICALS** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

1. வ.எண்.4–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **SANJAY ELECTRICALS** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

ஓம்.திரு.ஜெ.பிரேம் ஆனந்த்
தனி அலுவலர்

// உண்மை நகல் // உத்திரவுப்படி //

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி